தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

வருடாந்த அறிக்கை

2010

எமது செயற்பணி

“ இலங்கையை நீல மற்றும் நிற மாணிக்கங்களுக்கான முன்னணித் தயாரிப்பாளராக்கி உலகிற்கு உயர் தரத்திலான ஆபரணங்களிற்கான ஓர் பிராந்திய மைய வழங்குனராக முன்னணியில் திகழ்வதாகும˙”

எமது பிரதான பணி

“ எம்மில் அக்கறையுடைய தரப்பினர்களுக்கு நேர்மையான நலன்களைப் பகிர்வதற்காகவும் உரிய தொழிநுட்பப் பயன்பாடு மற்றும் நம்பகமான தரச் சான்றிதழ் முறை ஒன்றினூடாக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வியாபாரத்தை அதிகரிக்கும் கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குவதே எமது நோக்காகும். ”

என்ஜீஜேஏ/6/ஆண்டறிக்கை

தேசிய இரத்தினக்கள், ஆபரண அதிகாரசபை,
இல. 25, கோல்பேஸ் டெரஸ்,
கொழும்பு 03.
2012 யூலை 30

கௌரவ சுற்றாடல் அமைச்சர்,
சுற்றாடல் அமைச்சு,
ஙிசம்பத்பாயம்
82, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

கௌரவ அமைச்சர்,

2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 32 (3) ஆம் பிரிவின் விதிகளின் கீழும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழும், கீழ்க்காணும் ஆவணங்களை நான் சமர்ப்பிக்கின்றேன்.

(1) 2010 ஆம் ஆண்டிற்கான தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் நிருவாக அறிக்கை

(2) கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முறையாகக் கணக்காய்வு செய்யப்பட்ட இவ் அதிகார சபையின் 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையும், 2010 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கும்.

(3) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையானது 2010 நிதியாண்டின் இறுதியில் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்பாடுகள் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கியமையைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

நன்றி
உங்கள் உண்மையுள்ள

ஜெனரல் ரொஹான் தலுவத்தை
தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்
தேசிய இரத்தினக்கள், ஆபரண அதிகாரசபை

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் சபைப் பணிப்பாளர்கள்

ஆண்டு 2010

			சேர்ந்த திகதி	கடமையில் இருந்து இராஜினாமாச் செய்த திகதி
			-------------	------------
01.	திரு. ஹஸித்த திலக்கரட்ண	தலைவர்	2007 ஆக 28	2010 மே 17
02.	திரு. அனில் கொஸ்வத்தை	உறுப்பினர்	2008 நவ 17	2010 மே 11
03.	திரு. எஸ்.ஏ.சீ.எஸ்.டபிள்யூ.ஜயத்திலக்க	உறுப்பினர்	2006 சன 24	2010 மே 11
04.	தேசபந்து. மொஹமட் மக்கி ஹசீம்	உறுப்பினர்	2007 செப் 28	2010 மே 11
05.	திரு. அர்ஜுன் தர்மதாஸ	உறுப்பினர்	2007 செப் 28	2010 மே 11
06	திரு. ஈ.ஜீ.ஜே. விஜேவர்தன	உறுப்பினர்	2008 திசெ 22	2010 மே 11
07.	திரு. ஏ.எச்.சீ. எல்லாவல	உறுப்பினர்	2007 செப் 28	2010 மே 14
08	திரு. எஸ். அலோசியஸ்	உறுப்பினர்	2008 சன 23	2010 மே 19
09.	திரு. எம்.எப்.ரசீன்	உறுப்பினர்	2008 யூலை 17	2010 மே 13
10.	திரு. பீ.எச்.ஓ. சந்ரவன்ஸ	உறுப்பினர்	2009 செப். 30	2010 மே 12
11.	திரு. ஏ.கே செனவிரத்ன	உறுப்பினர்	2006 சனவ 24	2010 மே 13
12.	திரு. ரீ.கே.என்.சீ. தியம்பரவத்த	உறுப்பினர்	2007 ஆக. 28	2010 மே 13
13.	திரு. அனில்கொஸ்வத்தை	தலைவர்	2010 மே 18	-
14.	திரு.சரத் சமரகோன்	உறுப்பினர்	2010 மே 14	-
15.	திருமதி. சுதர்மா கருனாரத்ன	உறுப்பினர்	2010 யூலை 21	-
16.	திரு. சானக ரட்னாயக்க	உறுப்பினர்	2010 யூன் 30	-
17.	திரு. ஏ.கே.சேனிவிரத்ன	உறுப்பினர்	2010 யூன் 30	-
18.	திரு.பீ.எச்.ஓ.சந்ரவன்ச	உறுப்பினர்	2010 ஆக. 30	-
19.	திருமதி. சந்ரா ஏகனாயக்க	உறுப்பினர்	2010 யூன் 30	-
20.	திரு. மொகமட் பைசால் ரசீன்	உறுப்பினர்	2010 யூன் 30	-
21.	திரு. ரீ.கே.என்.சீ.தியம்பரவத்தை	உறுப்பினர்	2010 மே 14	-
22.	திரு. ஆர்.எம். ஜயதிலக்க	உறுப்பினர்	2010 மே 14	-

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான 2010 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

01 2010 ஆம் ஆண்டு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் செயற்பாடுகளின் 16 ஆவது ஆண்டைக் குறிக்கின்றது. மீளாய்வாண்டிற்கான அதன் செயற்பாடுகள் இரத்தினபுரி தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பிலுள்ள அலுவலகம் மூலமாகவும், இரத்தினபுரி, எகலியகொட, மாத்தறை, நாவுல, மொனறாகல, கட்டுநாயக்க பிராந்திய அலகுகளின் மூலமாகவும் கட்டுநாயக்கா விசேட இரத்தினக்கல் கூறு மற்றும் உலக வர்த்தக மையத்திலுள்ள இரத்தினக்கல், ஆபரண பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றின் மூலமாகவும் நடாத்தப்பட்டுள்ளன.

02. அதிகார சபையின் பணிகள் :

(அ) இரத்தினக்கல் கைத்தொழிலையும், ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்,

(ஆ) இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான திட்டங்களை ஆரம்பித்தலும் நடைமுறைப்படுத்தலும்,

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே இரத்தினக்கற்களுக்கும் ஆபரணங்களுக்குமான சந்தையைப் பயன்படுத்தலும் உலக சந்தைகளில் அத்தகைய இரத்தினக்கற்களுக்கும் ஆபரணங்களுக்குமான தேவையை ஊக்குவித்தலும்,

(ஈ) இரத்தினக்கல் கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில் ஆகியவற்றின் தொடர்பிலான சகல அம்சங்கள் மீதும் விசேடமாகச் சூட்டுப் பதனிடுகை, இரத்தினக்கல் பட்டை தீட்டல் ஆகியவற்றில், இக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆளணியினர்களுக்கு தொழிநுட்பப் பயிற்சி வழங்கப்படுவதை ஊக்குவித்தலும் அவற்றிற்கு ஆதரவளித்தலும்,

(உ) வளவாய்ப்புள்ள கொள்வனவாளர்களிடையே இரத்தினக்கல் கைத்தொழிலிலும் ஆபரணக் கைத்தொழிலிலும் நம்பிக்கையை உருவாக்குவதற்குத் தேவையான நடடிக்கைகளை எடுத்தல்,

(ஊ) சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்தலையும், இலங்கையிலிருந்து இரத்தினக் கற்களைச் சட்ட விரோதமாக அகற்றுதலையும் தடைசெய்தல்,

(எ) அரசாங்கத்திடம் சுரங்கமறுத்தல் அல்லது இரத்தினக் கல் அகழ்தல் உரிமைகள் ஏதேனும் ஒதுக்கம் அல்லது பிற காரணத்தின் நிமித்தம் இருக்குமிடத்து அரசாங்க காணியில் அல்லது அரசாங்க காணிக்கு மேல் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் தீர்வு செய்யப்பட்ட காணியில் அல்லது காணியின் மேல் இரத்தினக்கற்கள் அகழ்வதற்கான உரிமையைப் பராதீனப்படுத்துவதற்குப் பொறுப்பான பிரத்தியேக அதிகார சபையாகக் கடமையாற்றுதல்.

(ஏ) இரத்தினக்கற்கள், ஆபரணங்களின் சந்தைப்படுத்தலுக்குத் தேவையான தொழிநுட்ப மற்றும் பிற ஆலோசனை களையும் உட்கட்டமைப்பு ஆதரவையும் வழங்குதல்,

(ஐ) எந்த அட்டவணைப்படுத்திய எழுத்திலான சட்டத்தின் நிருவாகத்தையும் அது பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக இருக்குமிடத்து மேற்கொள்ளுதல்,

(i) அது, இரத்தினக்கற்களின் அல்லது இரத்தினக்கல் கைத்தொழிலின் விடயத்தில் ஏற்புடைத்தானதாகவிருக்குமிடத்து அல்லது

(ii) இச் சட்டத்தின் கீழ் இவ்வதிகாரசபையானது அதன் அதிகாரங்கள், பணிகள், கடமைகளை செயற்படுத்துவதையும் நிறைவேற்றுவதையும் மேற்கொள்வதையும் இயலச் செய்யும் நோக்கத்திற்கு அவ்வண்ணம் செய்வது தேவையானதாக இருக்குமிடத்து,

(ஒ) இரத்தினக்கற்களின் சான்றுப்படுத்தலுக்கும் அரும் உலோகங்களின் பரீட்சை மேற்கொள்வதற்குமாக அலுவலகங்களைத் தாபித்தல்,

(ஓ) உற்பத்தியாளரொருவரின் கோரிக்கையின் பேரில் விதத்துரைக்கப்பட்ட விதத்தில் மாற்று முத்திரை ஒன்றுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆபரணங்களுக்கு முத்திரையிடலைச் செய்தல்,

(ஔ) இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழிலினதும் ஆபரணக் கைத்தொழிலினதும் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் கூட்டிணைப்பதற்குமாக இரத்தினக்கல் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இடையே தேவையான இணைப்பை ஏற்படுத்துதல்,

(க) இரத்தினக்கல் கைத்தொழிலும் ஆபரணக் கைத்தொழிலும் பணியாற்றுகின்ற ஆட்களின் வேலையின் நியதிகள், நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் குறிப்பாக அத்தகைய ஆட்களை உயிராபத்திலிருந்தும் அங்க ஆபத்திலிருந்தும் பாதுகாப்பதற்கு எடுக்கப்படவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்தலும்.

03. நிதி

3.i திரவத்தன்மை

இவ்வாண்டின் தொடக்கத்தில் காசு மீதியும், வங்கி மீதியும் ரூபா 15.623 மில்லியனாக இருந்தது. இவ்வாண்டின் முடிவில் இது ரூபா 33.543 மில்லியனாக இருந்தது. திறைசேரி உண்டியல்களிலும், நிலையான வைப்புக்களிலும், அழைப்பு வைப்புகளிலும் உள்ள தொகை ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 225.335 மில்லியனாகவும் ஆண்டின் இறுதியில் ரூபா 241.070 மில்லியனாகவும் இருந்தது.

3.ii இலாபத் தகவு

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வதிகார சபையினது தனது சுயமாகப் பிறப்பிக்கப்பட்ட நிதியங்களுடன் தொழிற்படக் கூடிய அதன் நிதி ஒப்பேறு வாய்ப்பு வளத்தைத் தெளிவாகக் காண்பிக்கிறது.

	2005	2006	2007	2008	2009	2010
	ரூபாமில்	ரூபா மில்	ரூபா மில்	ரூபா மில்	ரூபா மில்	ரூபா மில்
மொத்த வருமானம்	135.339	194.048	215.730	258.180	219.443	228.962
மொத்த செலவினம்	130.590	188.007	232.277	228.772	230.942	261.929
இலாபம் (வரிக்கு முன்னர்)	4.750	6.041	(16.54)	29.408	(11.498)	(32.967)

04. மனித வளங்கள்

தொழிசார் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி 2010 ஆம் ஆண்டின் முடிவில் இவ்வதிகார சபையின் பதவியினர்கள் 258 பேர்களாக இருந்தனர். எமது குழு உறுப்பினர்களின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி, உயர் முன்னுரிமையாகக் கருதப்படுவதுடன் மனித வள அபிவிருத்திக்கு வாய்ப்பு வழங்குவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

05. உத்தரவுச் சீட்டுக்கள் வழங்கல்

இந்த அதிகாரசபையின் பிராந்தியக் கூறுகளினாலும் கொழும்பு அலுவலகத்தினாலும் இரத்தினக்கல் கைத்தொழிலுக்காகக் கடந்த நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிட்டு வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டுகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

	2005	**2006**	**2007**	**2008**	**2009**	**2010**
இரத்தினக்கல் அகழ்தல் உத்தரவுச் சீட்டுகளின் எண்ணிக்கை	4,471	4,734	5,021	4,204	3,970	4061
இரத்தினக்கல் வணிகர்கள் உத்தரவுச் சீட்டுகள்	3,627	3,718	4,637	4,794	3,996	4195
பட்டை தீட்டல் உத்தரவுச் சீட்டுக்கள்	276	270	239	229	174	168
இரத்தினக்கல் ஏலவிற்பனை உத்தரவுச் சீட்டுக்கள்	334	298	428	300	217	262
மொத்த உத்தரவுச் சீட்டுக்கள்	**8,711**	**9,020**	**10,325**	**9,527**	**8,327**	**8,686**

06. அதிகாரமளிக்கப்படாத இரத்தினக்கல் அகழ்வையும் சூழலுக்குச் சேதம் விளைவிக்கப்படுவதையும் கட்டுப்படுத்தல்

சட்ட விரோதமான இரத்தினக்கல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கும் சூழலின் அழிவைத்தடுப்பதற்குமாக மீளாய்வுக் காலப்பகுதியில் இவ்வதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பல்வேறு திடீர்ச் சோதனைகளை மீளாய்வுக் காலப்பகுதியில் நடாத்தியுள்ளனர். குற்றப் பணங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 8.09 மில்லியனாகும். அதிகார சபையானது பல பகுதிகளில் கைவிடப்பட்ட இரத்தினக்கல் குழிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

07. சேவைகளும் பிற அபிவிருத்தி செயற்பாடுகளும்

7.1 ஏற்றுமதி மற்றும் ஏற்றுமதி மேம்பாடு

I தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வதேச வியாபாரச் சந்தைக் கண்காட்சிகளில் “இலங்கை களம்” இன் அனுசரணையாளராகவும் ஒழுங்கமைப்பாளராககவும் இருத்தல்.

(1) சீன சர்வதேச தங்கம், ஆபரணம் மற்றும் இரத்தினக்கல் கண்காட்சி ï சென்ஜென் - மார்ச்

(2) ரிஜுவலரி சங்காய்ò ï ஏப்ரல்

(3) சிங்கப்பூர் சர்வதேச ஆபரணக் கண்காட்சி ï ஆகஸ்ட்

(4) சீன சர்வதேச தங்கம், ஆபரணம் மற்றும் இரத்தினக்கல் கண்காட்சி ï சென்ஜென் - மார்ச்

(5) சீன சர்வதேச தங்கம், ஆபரணம் மற்றும் இரத்தினக்கல் கண்காட்சி ï சங்காய் - நவம்பர்

(6) கிம்பளி பிரோஸஸ் குழுக் கூட்டம் - டெல். அவீவ், இஸ்ராயில் - நவம்பர்

II. பஸட் ஶ்ரீ லங்கா ï 2010 கண்காட்சியின் பிரதான அனுசரணையாளர் ï 20 ஆவது இலங்கை சர்வதேச இரத்தினக்கல் ஆபரணங்கள் கண்காட்சி

III. இலங்கை சர்வதேச இரத்தினக்கல், ஆபரண கண்காட்சி 2010 “பஸட்” இல் இரத்தினக்கல், ஆபரணத் துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு இலங்கை சாவடிகளை வழங்குதல்.

IV. ஜுவெல்ஸ் ஶ்ரீ லங்கா ï 2010 கண்காட்சியை இலங்கை இரத்தினக்கல் கைத்தொழிலாளர்களின் ஒருங்கிணைப்புடன் ஒழுங்குபடுத்துதல்.

V. முன்னணி கண்காட்சிகள் மற்றும் தனியார் கண்காட்சிகள் தொடர்பாக ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளிக்கு முகமாக சேவைக் கட்டண விலக்குகளைப் பெற்றுக்கொடுத்தல்.

VI. வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் கட்டுநாயக்க எயர் கார்கோ கிராமத்தில் இரத்தினக்கல் நிலையத்தில் ஏற்றுமதி வசதிகளை நாள் முழுவதும் வழங்குதல்.

VII. இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் தாய்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் உதவியுடன் ஆபரண வடிவமைப்பு மீதான ஓர் உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குபடுத்துதல்.

VIII. கூட்டத்தில் பங்கேற்பதற்கு உரித்துடைய சகலரும் பங்கேற்கும் கூட்டங்களில் பங்கேற்று பட்டை தீட்டப்படாத மாணிக்கங்களின் இறக்குமதி ஏற்றுமதிகள் மீது கம்பனி சான்றுறுதியிடல் முறைமையின் “கிம்பளி பிரோஸஸ் சேர்ட்டிபிகேஷன் ஸ்கீம்” கண்காணிப்பும் வசதியளிப்பும்

IX. மின் வணிக வசதியுடன் ஓர் தனிப்பட்ட இணையத்தினை நிர்வகித்தல் - **www.srilankagemautho.com**

X. இலங்கையின் இரத்தினவக்கல் ஆபரணக் களத்தின் அரசாங்க அனுசரணையாளராக “இலங்கை இரத்தினக்கல் ஆபரண பரிமாற்றல்” – (எஸ்எல்ஜீஜேஈ) இன் முகாமைத்துவம்.

XI. வியாபாரத்தின் நலனுக்காக விழிப்புணர்வு விரிவுரைகளை ஒழுங்குபடுத்துதல்.

XII. கைத்தொழிற் துறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், கருவிகள், இயந்திர உபகரணங்களின் இறக்குமதிக்காக வரிச் சலுகைகளில் உதவியளித்தல்.

XIII. அரசாங்க/ தனியார் துறைகளின் பிரதிநிதிகள்களது உத்தியோகபூர்வ/ வியாபார பணிகளிற்கு வசதியளித்தல்.

08. இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதிகள்

கீழே தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் இலங்கை இரத்தினக்கல், ஆபரண ஏற்றுமதிகளின் நிலையைக் காண்பிக்கின்றன.

	2005	2006	2007	2008	2009	2010
	ரூபா மில்	ரூபா மில்	ரூபா மில்	ரூபா மில்	ரூபா மில்	ரூபா மில்
இரத்தினக்கல் ஏற்றுமதிகள்	8,004.7	9,853.2	10,444.2	8,281.055	7,225.8	7,488.6
ஆபரண ஏற்றுமதிகள்	1,309.1	1,751.3	2,075.6	1,727.926	1,522.9	1,490.5
கெவுடா ஏற்றுமதிகள்	208.6	214.1	203.8	163.634	107.7	136.5
வைர மீள் ஏற்றுமதிகள்	26,156.8	31,722.7	37,774.6	44,393.700	35,965.96	36,030.1
வைர ஆபரண ஏற்றுமதிகள்	4.36.6	717.7	813.8	932.390	417.5	312.5
மொத்த ஏற்றுமதிகள்	**36,115.8**	**44,259.0**	**51,312.0**	**55,498.705**	**45,239.86**	**45,458.20**

ஒப்பம் : ஜெனரல் ரொஹான் டீ.எஸ்.தலுவத்தை

தலைவர்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை திங்கட்கிழமை, பெப்ரவரி 28, 2010

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 ஆம் ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு

வருமனம்	அட்டவணை	2010	2009
		ரூபா. சதம்	ரூபா. சதம்
செயற்பாட்டு வருமானம்	1	172,045,434.96	155,107,183.76
		172,045,434.96	155,107,183.76
கழி :- செலவினம்			
தாபனச் செலவுகள்	**2**	91,195,461.26	75,737,344.41
ஆளணிச் செலவுகள்	**3**	108,338,382.99	108,792,844.08
வாகனம் நடாத்தற் செலவுகள்	**4**	11,329,634.11	11,491,486.51
ஊக்குவிப்புச் செலவுகள்	**5**	49,028,710.41	33,264,141.87
நிதிச் செலவுகள்	**6**	1,124,219.49	888,810.36
ஏனைய செலவுகள்		913,268.36	767,371.44
மொத்தச் செயற்பாட்டுச் செலவினம்		***261,929,676.62***	***230,941,998.67***
ஏனைய வருமானத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/ நட்டம்		***(89,884,241.66)***	***(75,834,814.91)***
கூட்டு:			
ஏனைய வருமானம்	**7**	56,917,756.10	64,336,627.46
ஏனைய வருமானத்திற்கு பின்னரான இலாபம்/ நட்டம்		***(32,966,485.56)***	***(11,498,187.45)***
கழி:			
வரிக்கான ஏற்பாடு		***(6,000,000.00)***	***(3,000,000.00)***
காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம்		***(38,966,485.56)***	***(14,498,187.45)***

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	31.12.2010 ரூபா சதம்	31.12.2009 ரூபா சதம்
சொத்துக்கள்			
நடைமுறையில்லாத சொத்துக்கள்			
இயந்திர ஆதன உபகரணம்	1	232,100,124.63	242,207,468.77
இரத்தினக்கற்கள் பொருட்காட்சி		16,768,000.00	16,768,000.00
நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை (கைவிடப்பட்ட செயற்திட்டம்)		1,500,440.70	1,500,440.70
பின்போடப்பட்ட செலவினம்	2	3,246,249.52	4,523,559.31
முதலீடுகள்	3	4,294,600.00	4,286,600.00
நடைமுறைச் சொத்துக்கள்			
பதிவேட்டுப் பொருட்கள்	4	2,111,708.12	6,515,049.68
கடன்பட்டோர்	5	24,828,921.53	30,957,940.95
திறைசேரி உண்டியல்கள்	6	221,990,204.06	221,927,649.13
அட்டுறு வருமானம்	7	7,370,996.59	10,387,847.16
முற்கொடுப்பனவுகள்	8	977,704.94	2,054,571.48
வைப்புகள்	9	30,940,221.46	28,929,934.79
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	10	16,833,179.02	20,059,218.26
ஏழு நாள் அழைப்பு வைப்புக்கள்		-	-
திறைசேரி உண்டியல்களின் மீள் கொள்வனவு (ரீபோ)	11	15,384,254.12	-
அரச நிறுவக தற்காலிக மிகை		3,696,116.75	3,407,677.37
வங்கி மற்றும் காசு மீதிகள்	12	33,533,134.45	15,623,191.43
மொத்தச் சொத்துக்கள்		***615,575,855.89***	***609,149,149.05***

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	31.12.2010 ரூபா சதம்	31.12.2009 ரூபா சதம்
உரிமையாண்மையும் பொறுப்புகளும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்			
1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண சட்டத்தின் 19(1) ஆம் வாசகத்தின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம்		150,000,000.00 ===========	150,000,000.00 ===========
பங்களிப்பு மூலதனம்		30,000,000.00	30,000,000.00
ஒதுக்கங்கள்			
அபிவிருத்தி ஒதுக்கம்		50,137,834.11	50,137,834.11
மீள் பெறுமான மதிப்பீட்டு ஒதுக்கம் (இரத்தினக்கற்கள்)		14,366,267.00	14,366,267.00
மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்கம் (சொத்துக்கள்)		61,177,755.99	61,177,755.99
மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		41,071,971.96	41,071,971.96
இரத்தினக்கல் காணி ஒதுக்கத்தின் புனரமைப்பு		24,765,260.04	24,553,654.71
உலக வங்கி உதவி		3,869,409.98	3,869,409.98
வை2கே உதவி உலக வங்கி		573,750.00	573,750.00
பொது ஒதுக்கம்		44,033,729.08	44,033,729.08
வருமான, செலவின மிகை	13	43,669,059.44	57,606,878.89
இலாபம்/நட்டம்		(38,966,485.56)	(14,498,187.45)

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	31.12.2010 ரூபா சதம்	31.12.2009 ரூபா சதம்
நடைமுறையல்லாத பொறுப்புகள்			
இளைப்பாறல் கடன் கடப்பாடு		34,689,804.50	44,431,537.49
நடைமுறைப் பொறுப்புகள்			
கடன் கொடுனர்கள்	14	66,529,290.37	67,131,709.82
இரத்தினக்கல் அகழ்வு மற்றும் பிற வைப்புகள்	15	181,892,471.07	148,085,280.63
அட்டுறு செலவினங்கள்		47,574,096.50	23,950,520.23
செலுத்த வேண்டிய வருமான வரி		(10,153,408.88)	(4,767,163.24)
இரத்தினக்கல் அளிப்பு நிதியம் (தண்டப்பணங்கள்)		20,345,050.29	17,424,199.85
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புகளும்		***615,575,855.89***	***609,149,149.05***

ஒப்பம் தலைவர் ஒப்பம் பிரதான கணக்காளர்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 திசெம்பர் 31 இல் இருந்தவாறான காசுப்பாய்ச்சல் கூற்று

	31.12.2010	31.12.2009
	ரூபா சதம்	ரூபா சதம்
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்		
வரி விதிப்பிற்கும் அதிவிசேட விடயங்களுக்கும் முன்னர் தேறிய மிகை	(32,966,485.56)	(11,498,187.00)
பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள்		
பின்போடப்பட்ட செலவினம்	1,277,309.79	1,528,099.00
பெறுமானத் தேய்வு	26,838,883.14	22,337,986.00
பணிக்கொடை	3,496,422.50	6,236,295.00
மருத்துவ நிதியம்	-	2,000,000.00
முன்னைய ஆண்டுச் சீராக்கம்	(13,937,819.45)	-
முதலீட்டு வருமானம்	(24,084,818.32)	(44,739,353.00)
வருமான வரிக்கான ஏற்பாடு	6,000,000.00	3,000,000.00
நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பு மீதான இலாபம்	-	(566,329.00)
	(410,022.34)	(10,203,302.00)
	(33,376,507.90)	(21,701,489.00)

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 திசெம்பர் 31 இல் இருந்தவாறான காசுப்பாய்ச்சல் கூற்று

	31.12.2010 ரூபா சதம்	31.12.2009 ரூபா சதம்
தொழிற்படு மூலதனம் மீதான தாக்கம் அதிகரிப்பு/ குறைவு		
இருப்பு	4,403,341.56	(665,018.00)
கடன்பட்டோர்	6,129,019.42	(3,177,872.00)
அட்டுறு வருமானம்	3,016,850.59	6,074,106.00
முற்கொப்பனவுகள்	1,076,866.54	4,714,068.00
வைப்புகள்	(2,010,286.67)	(25,681,911.00)
கடன் மற்றும் முற்பணங்கள்	3,226,039.24	994,573.00
இரத்தினக்கல் அகழ்தல் மற்றும் பிற வைப்புகள்	33,807,190.44	(82,655,410.00)
கடன் கொடுனர்	(602,419.45)	(6,718,243.00)
அட்டுறு செலவுகள்	23,623,576.27	11,518,497.00
கடிதங்கள்	2,920,850.44	4,010,094.00
வரி ஏற்பாடு	6,000,000.00	3,000,000.00
	81,591,028.38	(88,587,116.00)
கழி		
வரிக் கொடுப்பனவு	(4,438,823.49)	(6,345,301.00)
பிரேரிக்கப்பட்ட வரிக் கொடுப்பனவு	-	(4,429,429.00)
மருத்துவக் கொடுப்பனவு	-	(2,947,256.00)
பணிக்கொடை கொடுப்பனவு	(13,238,155.49)	(7,189,459.00)
ஈஎஸ்சீ கொடுப்பனவு	(1,458,400.00)	(1,485,635.00)
	(19,135,378.98)	(22,397,080.00)
	62,455,649.40	(110,984,196.00)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்	**(29,079,141.50)**	**(132,685,685.00)**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 திசெம்பர் 31 இல் இருந்தவாறான காசுப்பாய்ச்சல் கூற்று

முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
முதலீட்டு வருமானம்	21,093,984.05	39,663,843.00
நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பிலிருந்து விற்பனை வரும்படிகள்	-	566,329.00
நிலையான சொத்துக்களின் சேர்ப்பனவுகள்	(16,731,539.00)	(7,292,959.00)
முதலீடுகள்	(15,743,248.43)	95,739,845.00
மூலதன நடைமுறை வேலை	-	25,000.00
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள்	(11,380,803.38)	128,702,058.00
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்		
இரத்தினக்கல் காணியின் புனரமைப்பு	211,605.33	482,868.00
நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள்	211,605.33	482,868.00
காசும் காசிற்குச் சமமானவற்றிலுமான தேறிய அதிகரிப்பு	**17,909,943.45**	**(3,500,759.00)**
இக்காலப் பகுதியின் ஆரம்பத்தில காணப்பட்ட காசும் காசிற்குச் சமமானவைகளும்	15,623,191.00	19,123,950.00
இக்காலப் பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசும் காசிற்குச் சமமானவைகளும்	33,533,134.45	15,623,191.00
காசும் காசிற்குச் சமமானவற்றிலுமான தேறிய அதிகரிப்பு	**17,909,943.45**	**(3,500,759.00)**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

2010 ஆம் ஆண்டிற்கான மூலதன மாற்றக் கூற்றுக்கள்

		31-12-2010		31-12-2009
		ரூபா		ரூபா
பங்கு மூலதனம்		30,000,000		30,000,000
அபிவிருத்தி ஒதுக்கங்கள்		50,137,834		50,137,834
மீள்மதிப்பீட்டு உதுக்கம் (இரத்தினக்கற்கள்)		14,366,267		14,366,267
உலக வங்கி உதவி		3,869,410		3,869,410
வை 2 சே உலக வங்கி உதவி		573,750		573,750
மோட்டார் வாகன மீள்மதிப்பீடு		41,071,972		41,071,972
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (சொத்துக்கள்)		61,177,756		61,177,756
பொது ஒதுக்கம்		44,033,729		44,033,729
இரத்தினக்கற் காணிப் புனரமைப்பிற்கான ஒதுக்கம்	24,553,654		24,070,787	
பெறப்பட்ட நிதியம்	211,606		(5,618,820)	
	24,765,260		18,451,967	
பறிமுதல் வைப்புகள்			7,897,305	
இரத்தினக்கற் காணிப் புனரமைப் பாதுகாப்பு செலவினங்கங்கள்		24,765,260	(1,795,618)	24,553,654
வருமானச் செலவின மிகை	57,606,879		66,381,610	
சீராக்கங்கள்	(13,937,819)		(8,774,731)	
	43,669,060		57,606,879	
இலாபம்/ நட்டம்	(38,966,485)	4,702,574	(14,498,187)	43,108,692
		274,698,552		**312,893,064**

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

1. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 பொது

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இவ்வதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படை மீது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுகளைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்குச் சீராக்கல்கள் எதுவும் செய்யப்படவில்லை. முன்னைய ஆண்டில் உபயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் ஒத்திருக்கின்றன. கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள் முறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்ட தொகைகளும் கூற்றக்களும் அவசியம் ஏற்படுகையில் நடைமுறையாண்டின் வெளிப்படுத்தலுக்கு இணங்கம் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

1.2 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

1.2.1 ஆதன, இயந்திர மற்றும் பொறித்தொகுதி உபகரணத் தேய்மானம்

சகல ஆதன, இயந்திர மற்றும் பொறித்தொகுதி உபகரணங்களும் கொள்வனவுக் கிரயம் அல்லது நிர்மாணிப்பு அல்லது ஏதேனுமோர் நிகழ்வுடனான மதிப்பீட்டில் பதிவு செய்யப்படுகின்றது. சொத்துக்கள் வரலாற்றுக் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகையில் இருந்து நேர்கோட்டு அடிப்படையில் வெவ்வேறு சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கப்படுகின்றது.

முழு உடைமையுள்ள கட்டிடங்கள்	2%	தலா ஒரு ஆண்டிற்கு
மோட்டார் வாகனங்கள்	25%	-மேற்படி-
கணனிகள்	20%	-மேற்படி-
தளபாடங்களும் உபகரணங்களும் (ஏனையவை)	10%	-மேற்படி-

கொள்வனவு ஆண்டில் பெறுமானத் தேய்வு விதிக்கப்படாத அதே வேளையில் கைதவிர்க்கப்படும் ஆண்டில் முழு ஆண்டின் பெறுமானத் தேய்வு விதிக்கப்படுகின்றது.

1.2.2 மூலதன நடைமுறை வேலை

(1) கொழும்பு இரத்தினக்கல் நகரம்

கொழும்பு இரத்தினக்கல் நகரத்தின் மொத்த கிரயமான ரூபா 1,475,440.70 ஓர் கைவிடப்பட்ட செயற்திட்டமாக இனங்காணப்பட்டுள்ளது.

1.2.3 இரத்தினக்கல் கண்காட்சி

இரத்தினக்கல் கண்காட்சியின் பெறுமதி, ஐந்தொகையில் இரத்தினக்கற்களின் மீள்பெறுமானம் மதிப்பிடப்பட்ட தொகையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

1.2.4 பொருட்பட்டியல்

பொருட்பட்டியல்கள் குறைந்த செலவில் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் பெறுமானம் மதிப்பிடப்பட்டுள்ளது.

1.2.5 பெறவேண்டியவைகள்

தேறுமென மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் பெறவேண்டியவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.2.6 குறுந்தவணை முதலீடுகள்

திறைசேரி உண்டியல்களும் ஏனைய முதலீட்டு அழைப்பு வைப்புகளும் கிரயத்தில் பெறுமதியிடப்பட்டிருந்தன.

1.2.7 காசும் காசிற்குச் சமமானவைகளும்

காசும் காசிற்குச் சமமானவைகளும் 2010.12.31 இல் உள்ளவாறான கையிலுள்ள காசையும் வங்கியிலுள்ள காசையும் உள்ளடக்குகின்றன.

1.2.8 காசுப்பாய்ச்சல்

காசுப்பாய்ச்சல் கூற்று நேரில் முறையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது.

1.2.9 அன்னிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்த நாளில் நிலவிய நாணயமாற்று விகிதத்தில் அன்னிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் கணிப்பிடப்படுகின்றன. அன்னிய செலாவணியில் குறிப்பிடப்பட்ட நாணயச் சொத்துக்கள் ஐந்தொகைத்திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதத்தின் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன.

1.3 பணியாளர் நலன்கள்

1.3.1 பணிக்கொடைக்கான ஏற்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கு அமைவாகச் சகல பணியாளர்களுக்கும் சேவையின் தொடக்க ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டிய இளைப்பாறற் பணிக்கொடைக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம்

இலக்கப் பணிக்கொடை அதிகாரச் சட்டத்தின் கீழ் பணியாளர் ஒருவருக்கான பொறுப்பானது 5 ஆண்டுக் காலம் தொடர்ச்சியான சேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மாத்திரமே எழுகின்றது. இப் பொறுப்பிற்கு வெளியிலிருந்து நிதியளிக்கப்படாததுடன் இது உள்ளபடியாகவும் பெறமதியிடப்படுவதில்லை.

2010.12.31 இல் உள்ளவாறான மொத்தப் பொறுப்பு ரூபா 34,689,804.50 ஆகக் காணப்பட்டது. ரூபா 3,496,422.50 தொகை நடைமுறையாண்டின் இலாப நட்டக் கணக்கிற்குச் சாட்டப்பட்டுள்ளது.

1.3.2 வரையறுத்து பங்களிப்புச் செய்யப்பட்ட திட்டங்கள்

சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவிடப்பட்ட ஓர் செலவினமாகக் கூறப்பட்டுள்ளன. நடப்பாண்டின் போது அதிகாரசபை ஊழியர் சேமலாப நிதியத்திற்காகவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காகவும் முறையே ரூபா 10,427,270.80 தொகையையும் ரூபா 2,486,819.23 தொகையையும் செலவிட்டுள்ளது.

1.4 பொறுப்புகள்

1.4.1 நடைமுறைப் பொறுப்புகள்

நடைமுறைப் பொறுப்புகள் என்பவை கோரப்படும் போது அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் கொடுப்பனவைச் செலுத்த வேண்டியனவாகும். நடைமுறையல்லாத பொறுப்புகள் என்பவை ஐந்தொகைத் திகதியில் இருந்து ஓராண்டு காலத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட காலப் பகுதியில் கொடுப்பனவைச் செய்ய வேண்டியவைகளாகும்.

1.4.2 ஏற்பாடு மற்றும் பெறுமானத் தேய்வு

மீளாய்வாண்டிற்கான மொத்த ஏற்பாடுகள் வருமானச் செலவினக் கணக்கில் வேறாக வெளிக்காட்டப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டின்

தாக்கங்கள் நிதிக்கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களை வாசிக்க விரும்புபவர்களுக்கு மேலும் அர்த்தமுள்ள விளக்கத்தை அளிப்பதற்கு நிதிக் கூற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1.4.3 பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கல் அகழ்தல் வைப்புகள்

பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கல் அகழ்தல் வைப்புகள், 2000 ஆம் ஆண்டிலிருந்து இரத்தினக்கல & காணி புனரமைப்பு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கல் அகழ்தல் வைப்புகள் கடந்த ஆண்டைத் தொடர்ந்து வரும் வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.4.4 இரத்தினக்கல் அகழ்தல் மற்றும் பிற வைப்புகள்

2010 திசெம்பர் 31 இல் இருந்தவாறான மீளளிக்கப்படத்தக்க அகழ்வு வைப்புகள் ரூபா 181,892,471.07 தொகையாக இருந்தது

1.4.5 ஆய்வுகூட நிதியம்

இரத்தினக்கல் ஆபரண பரீட்சிப்பு மற்றும் சான்றுறுதிப்படுத்தலுக்காக சர்வதேச மட்டத்தில் ஓர் ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்காக இலங்கை இரத்தினக்கல் ஆபரண அமைப்பு (எஸ்எல்ஜீஜேஏ) லங்கா ஜெமொலொஜிகல் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றை உருவாக்கியது. 2001 சனவரி முதல் 2005 யூன் வரையான காலப்பகுதியின் போது மேற்குறித்த ஆய்வுகூட ஸ்தாபிப்பிற்காக அவர்களது பங்களிப்புத் தொகையான ரூபா 92,498,578.69 ஆனது 2009 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரத்துடன் லங்கா ஜெமொலொஜிகல் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு மாற்றப்பட்டது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மற்றும் லங்கா ஜெமொலொஜிகல் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 97,645,852 ஆகக் காணப்பட்டது.

1.4.6 வரிவிதிப்பு

வரிவிதிப்பு ஆண்டிற்கான வருமானச் சீராக்கலின் அடிப்படையிலேயே நடைமுறை வரிவிதிப்பிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. ரூபா 6,000,000 தொகை 2010.12.31 இல் உள்ளவாறான வரிக்கான ஏற்பாடாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

1.4.7 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்வுகளின் பொருண்மை கவனத்திற் கொள்ளப்பட்டு கணக்குகளில் சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

வருமானமும் செலவினமும்

1.5.1 வருமானத்தின் ஏற்பு

(i) கிரமமான வருமானம் கொடுப்பனவின் பெறுவனவின் போதும் முற்பணப் பெறுவனவானது முற்பணப் பெறுவனவுக் கணக்கிலும் செலவு வைக்கப்படுகின்றது. வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

(**ii**) உலக வர்த்தக மையத்தின் செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் வாடகை வருமானமும் பிற வருமானமும் அதன் மீது எதிரீடு செய்யப்பட்ட வருமானமாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாகப் புறம்பான மூலங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பெறவேண்டிய வாடகை அட்டுறு அடிப்படையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

(iii) பெறுமதியிடல் அலுவலகத்தின் இலாப நட்டங்கள் ரூபா 1,982,254.92 தொகையான பெறுமதியடல் முத்திரை வருமானத்தில் இருந்து நேரடி பொருட்கள் மற்றும் பராமரிப்புக் கிரயத்தொகையான ரூபா 225,490.92 கழிக்கப்பட்டதை அடுத்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

(iv) ஏற்றுமதி தரகுப் பணம் கணிப்பிடப்படுகையில் 2010 சனவரி வரையான ஏற்றுமதி வருமானங்கள் கணக்கிற்கு எடுக்கப்பட்டுள்ளன.

1.5.2 செலவினம்

(அ) வினைத்திறமை நிலையில் மூலதனம் சொத்துக்களைப் பேணிவைத்திருப்பதற்காக இவ்வதிகாரசபையை நடாத்துவதில் செய்யப்பட்ட சகல செலவினங்களும் இவ்வாண்டிற்கான வருமானத்திற்குச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வதிகாரசபையின் உழைப்புத் திறனை அதிகரிப்பதன் பொருட்டு நிரந்தரத் தன்மை வாய்ந்த சொத்துக்களின் கொள்வனவு நீடிப்பிற்கு அல்லது மேம்பாட்டிற்கு செய்யப்பட்ட சகல செலவினங்களும் மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளன.

1.5.3 நிகழத்தக்கவைகள்

பாதகமான சட்டத் தீர்வுகள் அல்லது வேறேதேனும் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக பொருண்மையான இழப்புகள் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை.

ரீஎம்/ஜீ/என்ஜீஜேஏ/ எப்ஏ/2010 2011 ஜூன் 1[illegible]

தலைவர்,
தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை

தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2011 ஏப்ரல் 05 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்து நியாயமாகச் சமர்ப்பிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படச் சாத்தியமான பொருண்மையான தவறான கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, நியாயமாக சமர்ப்பிப்பதற்கு ஏற்றவாறு உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தி பராமரித்துச் செல்லல், பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை தேர்ந்தெடுத்து பிரயோகித்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பன இப்பொறுப்பில் அடங்குகின்றன.

1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்துக்கான அடிப்படையும்

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிசார் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களினது மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான

மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக காணப்பட்டது. நிதிசார் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. நிதிசார் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளை தெரிவின் அடிப்படையில் பரிசோதனை செய்தல், நிதிசார் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள், முக்கிய மதிப்பீடுகள் மற்றும் நிதிசார் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் கணக்காய்வுப் பணிகளுக்குத் தேவையான போதியளவு தகவல்களும் விளக்கமளிப்புக்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கமைய எனது அபிப்பிராயத்துக்கு ஏற்ற அடிப்படையொன்று எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது என்பது எனது நம்பிக்கையாகும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் நிதி நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

ஐந்தொகையில் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த "இல்லம" காப்புறுதி நிதியத்திலும் ஒப்பந்தகாரர்களினது கணக்கிலும் நிலவிய முறையே ரூபா 4,212,623 மற்றும் ரூபா 6,126,285 மீதிகள் மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு உள்வாங்கப்பட்டிருந்தது. இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் இது வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்தினபுரி புதிய கட்டிடத் தொகுதியில் கடைகளை வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கியமையால் பெறப்படவேண்டிய ரூபா 3,187,000 கணக்குளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிட்டைகளின் படி அவ் ஆண்டுகளிற்காக செலுத்தப்படாத கணக்காய்வுக் கட்டணங்களின் மொத்தம் ரூபா 1,416,620 ஆன போதிலும் அட்டுறு கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 2,441,077 காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசுடமையாக்கப்பட்ட பிணைப்பணக் கணக்கு ரூபா 100,000 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மேம்படுத்தல் விடயமொன்றாக 2010 திசெம்பர் மாதத்தில் பெற்றுக் கொண்டிருந்த 14 ஆபரணப் பெட்டிகளிற்காக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 357,500 தொகை மீளாய்வாண்டின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.3 பெறவேண்டிய மற்றும் செலத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்பட்டோர் மீதியில் காணப்படுகின்ற ரூபா 163,949 ஆன திருப்பி அனுப்பப் பட்டிருந்த காசோலைகளில் ரூபா 29,436 பெறுமதியான 6 காசோலைகள் 3 தொடக்கம் 8 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து நிலவிவந்திருந்ததுடன் ரூபா 64,114 பெறுமதியான 8 காசோலைகள் 01 தொடக்கம் 3 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து நிலவிவந்திருந்தது.

(ஆ) மாணிக்கக் கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 9,786,537 தொகையில் 5 வருடங்களிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 4,898,232 மீதியொன்றும் காணப்பட்டதுடன் 2 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை பழமை வாய்ந்த மீதி ரூபா 4,521,304 ஆகும்.

(இ) சில்லறைக் கடன்பட்டோர் மீதியினுள் உள்ளடங்கியுள்ள ரூபா 57,407 இடர் கடன் தொகையும் பெலிதெனிய கட்டிடத்திலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 20,500 வாடகையும் ரூபா 9,025 ஆராய்ச்சித் தொகையும் அடங்கலாக மொத்தம் ரூபா 86,932 தொகை 8 வருடங்களைத் தாண்டியிருந்த போதிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை..

(ஈ) மீளாய்வாண்டிலும் முன்னைய இரு ஆண்டுகளிலும் உலக வர்த்தக மையத்தில் தாபிக்கப்பட்டிருந்த வியாபாரத் தளங்களை வாடகைக்கு வழங்கியமையால் மொத்தமாக ரூபா 4,975,285 தொகையினை உப குத்தகைக் காரர்களிடமிருந்து அதிகாரசபை அறவிட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 3,515,043 மொத்தமான 4 கடன்கொடுத்தோர் மீதிகள் 5 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவி வந்திருந்ததுடன் அவற்றை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 185,000 பிணைப் பணத்தினை மீளளித்தமைக்கான பண வைப்புப் பற்றுச்சீட்டு மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம், ரூபா 20,000 புகைப்படக் கட்டணத்தினை

செலுத்தியமைக்கான புகைப்படப் புத்தகம் மற்றும் சீடீக்கள், ரூபா 3,094,808 ஆன வீடமைப்புக் கடன் திட்டம் தொடர்பில் அதிகாரசபைக்கும் அரச அடைமான முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை, வர்த்தகக் கண்காட்சிக்காக தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 1,965,330 செலவினத்திற்குரிய கோவை மற்றும் ரூபா 232,100,125 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பிலான மெய்மையாய்வுச் சபை அறிக்கை போன்றன இன்மை காரணமாக அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ)	2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாட்சி மீதான சுற்றறிக்கையின் 5.2.1 மற்றும் 5.2.5 ஆம் பிரிவுகள்	வருடாந்த பாதீட்டினைத் தயாரிக்கையில் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை உள்ளடக்க வேண்டும் என்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு தொடர்புடைய அமைச்சு, திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2010 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பில் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை.
(ஆ)	1995 நொவம்பர் 20 ஆந் திகதிய 105 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை	மானியங்கள் மற்றும் அன்பளிப்புப் பொருட்களிற்காக முன்னைய ஆண்டின் வரிக்கு பின்னரான இலாபத்தில் 1% வரை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது செலவிடப்பட முடியுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் முன்னைய ஆண்டில் நட்டம் ஏற்பட்டிருக்கையிலும் அங்கீகாரமின்றி ரூபா 2,036,464 ஆன சின்னங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன.
(இ)	2009 நொவம்பர் 20 ஆந் திகதிய 440 ஆம் இலக்க அரசாங்க நிதிச்	அதிகாரசபையினால் ஞாபகச் சின்னங்கள், நகைப் பெட்டிகள் மற்றும் மாணிக்கக் கற்களைக் கொள்வனவு செய்வதற்காக

	சுற்றறிக்கை மற்றும் பெறுகைகள் வழிகாட்டல்கள் கையேடு	ரூபா 1,061,350 செலவிடப்பட்டிருந்ததுடன் இக் கொள்வனவுகளிற்காக திணைக்களக் கொள்வனவுச் சபையொன்றினதும் மதிப்பீட்டுச் சபையொன்றினதும் பரிந்துரைகள் தேவையான போதிலும் அதற்கு முரணாக பகிரங்க விலைகோரலுமின்றி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அமைச்சின் தேவைகளிற்காக இக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதாக 2011 மே 13 ஆந் திகதி தலைவரினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.
(ஈ)	2008 ஜுலை 28 ஆந் திகதிய பீஈடீ/40 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றிக்கை	2010 மே, ஜுன், ஜுலை மாதங்களிற்காக 05 உத்தியோகபூர்வ வாகனங்களிற்கு அங்கீகரித்த எல்லையினை மீறி 1505.99 லீற்றர் எரிபொருளிற்காக ரூபா 165,079 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் முறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
(உ)	பெறுகைகள் வழிகாட்டல்கள் கையேடு	
	(i) 2.14.1 ஆம் பந்தி	சர்வதேச தரத்திலமைந்த வர்த்தக கண்காட்சிக்காக கண்காட்சிப் பதாகைகளைப் பொருத்துவதற்காக ரூபா 2,355,074 இனை செலவிடுகையில் கொள்வனவுச் சபைக்கு குறித்த விடயம் தொடர்பில் அறிவு படைத்த உத்தயோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இது ஜுவெல்ஸ் சிறீ லங்கர் ஒழுங்கமைப்புச் சபையினால் திட்டமிட்டு அங்கீகரிக்கப்பட்டதாக 2011 மே 13 ஆந் திகதி தலைவரினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.
	(ii) 6.2.2 ஆம் பந்தி	(அ) வர்த்தகக் கண்காட்சிப் பணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு பகிரங்க விலைகோரல்களை மேற்கொள்கையில் விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக குறைந்த பட்சம் 21 நாள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 03 நாள் கொண்ட குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. (ஆ) மேற்படி பணிகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுக்களில் ரூபா 6,739,500 ஆகிய (வரி நீங்கலாக) குறைந்த விலை மனுவிலும் ஏறத்தாழ

இரண்டு மடங்கு அதிகமான ரூபா 12,381,500 ஆகிய (வரி நீங்கலாக) விலையினை தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படையாக அமைந்திருந்த காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை

(iii) 5.4.4 (i) ஆம் பந்தி	20% மாத்திரமே முற்பணமாக வழங்கப்பட முடியுமாயினும் வர்த்தகக் கண்காட்சிக்காக முகாமைத்துவப் பணிகளைப் பெற்றுக்கொள்கையில் இரண்டு சந்தர்ப்பங்களில் 30% ஆக முற்பணங்களைச் செலுத்துவதற்கு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மொத்தப் பெறுமதியில் 43% ஆகிய ரூபா 6,079,587 அதற்காக செலுத்தப்பட்டிருந்தது.
(iv) 4.3.1 (இ) ஆம் பிரிவு	மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தில் 10% ஆன அளவிற்கு மாத்திரமே அவசர எதிர்பாராத சந்தர்ப்பங்களிற்காக இடமளிக்க முடியுமாயினும் வர்த்தகக் கண்காட்சியின் மொத்தக் கிரயத்தில் 49% வரை மேலதிகச் செலவினங்களிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,862,500 ஆகிய மொத்தக் கிரயத்தில் 39% ஆன அளவு செலுத்தப்பட்டிருந்தது.
(v) 5.4.8 ஆம் பிரிவு	ஒப்பந்தவேலை அல்லது பணிகளின் மொத்தக் கிரயத்தில் 5% இற்கு குறையாத அளவிற்கு செயலாற்றல் பிணையொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் வர்த்தகக் கண்காட்சிக்கான முகாமைத்துவப் பணிகளிற்காக அதன் படி பிணையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதி மீளாய்வு

3.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 32,966,486 தேறிய நட்டமொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 11,498,187 ஆகும். காணிகளை ஏலமிடல் வருமானம் ரூபா 31,401,598 ஆல் குறைவடைந்திருந்தமை, நிர்வாக செலவினம் ரூபா 15,458,117 ஆலும் மேம்படுத்தல் செலவினம் ரூபா 15,764,568 ஆலும் அதிகரித்திருந்தமை தேறிய நட்டம் அதிகரிப்பதற்கு முக்கியமாக செல்வாக்கு செலுத்தியிருந்தன.

3.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளில் அதிகாரசபையின் நிதி விளைவுகளினது வரிக்கு முன்னரான நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

வருடம்	இலாபம்/(நட்டம்)
	ரூபா
2008	29,407,730
2009	(11,498,187)
2010	(32,966,486)

இதன் படி 2009 ஆம் ஆண்டில் 40 மில்லியனாலும் 2010 ஆம் ஆண்டில் 21 ஆலும் அதிகாரசபையின் நிதி வளைவுகள் பின்னடைவுற்றிருந்தமை அவதாக்கப்பட்டதுடன் இலாபத்தினை அதிகரிப்பதற்கு/நட்டத்தினைக் குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல்

மாணிக்கக் கல் தொழிலிற்காக அதிகார சபையின் பிராந்திய அலகுகள் மற்றும் கொழும்பில் அமைந்துள்ள அலுவலகங்களினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் மதிப்பீட்டு இலக்கினை அடைதல் விகிதாசாரமானது மானிக்கக் கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் 67% ஆகவும் வர்த்தக அனுமதிப்பத்திரம் 60% ஆகவும் மானிக்கக் கல் ஏலமிடல் அனுமதிப்பத்திர விநியோகம் 37% ஆகவும் காணப்பட்டன.

(ஆ) நியதிச் சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள்

முன்னைய 2 ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் நியதிச் சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

	2008	2009	2010
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
காணிகளை ஏலமிடல் - அரசாங்கக் காணிகள்	0.4	40.6	-
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகள்	54.5	8.2	17.5
மாணிக்கக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம்	8.5	7.7	19.1
வியாபார அனுமதிப்பத்திரம்	21.3	18.6	20.7
ஏற்றுமதிகள் மீதான தரகுப்பணம்	62.7	42.4	47.3
மாணிக்கக்கல் பட்டைதீட்டல் அனுமதிப்பத்திரம்	0.3	0.2	0.2

கெவுடா ஏற்றுமதித் தரகுப்பணம	7.54	5.8	5.5
	1.7	2.4	2.8
	------------	----------------	---------------
	156.9	125.9	113.1
	======	======	=======

இதன் படி,

(i) 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நியதிச்சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள் 28% இனால் குறைவடைந்திருந்தன.

(ii) மீளாய்வாண்டில் தேடுதல்களிற்காக ரூபா 1,469,836 செவிடப்பட்டிருக்கையிலும் மானிக்கக்கல் அகழ்வு மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் 50% இனால் அதிகரிக்கப்பட்டிருக்கையிலும் மீளாய்வாண்டில் நியதிச்சட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்திருந்தன.

(iii) மீளாய்வாண்டில் 888 அரசாங்கக் காணி ஏலமிடல்கள் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கும் பெருந்தோட்டக் கம்பனிகளிற்கும் சொந்தமான காணி ஏலமிடல்களை நடாத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 112 ஆகிய 12% அளவான காணிகள் மாத்திரமே ஏலமிடப்பட்டிருந்தன.

(இ) மானிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரண ஏற்றுமதிகள்

முன்னைய 4 வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகள் மீதான நிலைமை பின்வருமாறு காணப்பட்டன.

	2006	2007	2008	2009	2010
	ரூபா மில்லியன்				
மானிக்கக்கல் ஏற்றுமதிகள்	9,853	10,444	8,281	7,226	7,488
தங்க ஆபரண ஏற்றுமதிகள்	1,751	2,076	1,728	1,523	1,490
மொத்தம்	11,604	12,520	10,009	8,749	8,978
ஏற்றுமதி மேம்படுத்தல் செலவினம் (உள்நாடு/வெளிநாடு)	17	42	35	33	49
ஏற்றுமதி அதிகரிப்பு விகிதாசாரம் (முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு)		7%	(25%)	(14%)	3%

(i) 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மானிக்க ஏற்றுமதிகள் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முறையே 21%, 31%, மற்றும் 28% இனால் குறைவுற்றிருந்தன.

(ii) 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தங்க ஆபரண ஏற்றுமதிகள் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முறையே 16.76%, 26.63%, மற்றும் 28.22% இனால் குறைவடைந்திருந்தன.

(iii) ஏற்றுமதி மேம்படுத்தல் கிரயத்துடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் அதிகரிப்பொன்று காண்பிக்கப்படவில்லை.

(ஈ) வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சி – 2010

(i) 2010 ஆம் ஆண்டின் ஏற்றுமதி மேம்படுத்தல் திட்டத்தின் படி பங்குபற்றுவதற்கு தீர்மானமாகியிருந்த 9 வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் 5 இல் மாத்திரமே பங்குபற்றப்பட்டிருந்தது.

(ii) 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிக்காக மதிப்பீட்டினை மீறி செலவுகள் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் வருமாறு

வர்த்தகக் கண்காட்சிகள்	மதிப்பிடப்பட்ட செலவினம்	உள்ளபடியான செலவினம்	வேறுபாடு
	ரூபா	ரூபா	ரூபா
ஜுவலர் செங்கய் கண்காட்சி	1,887,356	4,866,539	2,979,183
வைய்னா இன்டர்நேஷனல் கோல்ட் ஜுவல்ரி என்ட் ஜெம் பெயா	1,040,331	2,749,475	1,709,144
சிங்கப்பூர் சர்வதேச ஜுவல்ரி கண்காட்சி	1,579,993	2,024,473	444,480
சீன சர்வதேச ஆபரணக் கண்காட்சி (பீஜிங்)	2,119,413	5,092,353	2,972,940

(உ) மீளாய்வாண்டில் 1155 தேடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 584 தேடுதல் பணிகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் கிடைத்திருந்த வருமானம் ரூபா 11,554,417 ஆகும்.

3.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலங்களைத் தோன்றுதல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் பணிகளிற்காக கெப் வாகனமொன்றின் தேவைப்பாட்டினைக் காண்பித்து ரூபா 9,700,000 இற்கு கெப் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதனை அப் பணிகளிற்கு பயன்படுத்தாது செயற்பாட்டுப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தரப்படுத்தல் இரசாயண ஆய்வுகூடமொன்றை தாபிப்பதற்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி வருமானத்தில் அறவிடப்பட்டிருந்த ரூபா 99,545,573 தொகையிலிருந்து நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்தது. இந் நதியத்திலிருந்து ரூபா 7,046,995 தொகையொன்று தரச் சான்றிதழ்களை விநியோகிக்கும் வசதிகளை வழங்குவதற்காக இணக்கம் காணப்பட்டிருந்த அமெரிக்கன் மெனிக் வர்த்தகக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எப்பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. ஆய்வுகூடத்தினை நிர்மாணிப்பதற்காக 2009 ஏப்ரல் வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் 2009 ஏப்ரல் மாதத்தில் அந் நிதியத்தில் எஞ்சியிருந்த ரூபா 92,498,578 தொகை அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது தனியார் நிறுவனமொன்றுக்கு அப் பணியினை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதிகாரசபையினால் அக் கம்பனியின் இரண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்காக ரூபா 26,208 செலவில் பத்திரிகை விளம்பரமொன்று செய்யப்பட்டிருந்தது.

(இ) வர்த்தகக் கண்காட்சிக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,760,000 பெறுமதியான Name Board, Special Gem display area, Information desk with tow spot light, entrance branding, display structure box போன்ற விடயங்கள் வர்த்தக கணக்காட்சி முடிவுற்று 5 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அதிகாரசபை வளவில் காணப்படாதிருந்ததுடன் இச் சொத்துக்கள் தனியார் இடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இச் சொத்துக்கள் அதிகாரசபையின் சொத்துக்கள் பதிவேட்டிற்கும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1998 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் “இல்லம” என்ற பெயரில் மானிக்கக்கல் சுரங்கத் தொழிலாளர்களிற்கான சமூகக் காப்புறுதித் திட்டமொன்றிற்காக வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இக் காப்புறுதித் திட்டத்திற்காக மானிக்கக்கல் சுரங்கத் தொழிலாளர்களிடமிருந்து ஆண்டுக்கு ரூபா 120 வீதம் தவணைப்பணம் அறவிடப்பட்டிருந்தது. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இக் காப்புறுதித் திட்டம் செயலிழந்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டில் பனிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கமைய இக் கணக்கின்

மீதியினை சில்லறை வருமானங்கள் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

3.2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் மருத்துவ உதவித் திட்டத்திற்கான நிறுவனத்தின் உதவுதொகை ரூபா 4,000,000 ஆனதுடன் உத்தியோகத்தர்களின் உதவுதொகை ரூபா 236,550 ஆக காணப்பட்டது. இதன் படி மருத்துவ உதவிக்கான மொத்தத் தொகையில் உத்தியோகத்தர்களின் உதவுதொகை 6% ஆனதுடன் நிறுவனத்தின் உதவுதொகை 94% ஆன உயர்ந்த பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. ஆண்டில் மருத்துவ உதவிச் செலுத்துகைகள் மொத்த உதவுதொகையில் 99.9% ஆக காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபைக்கும் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி வீடமைப்புக் கடன் திட்மொன்று செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொண்டிருந்த உத்தியோகத்தர்களினால் 2010 திசெம்பர் 31 இல் சகல கடன்களும் தீர்க்கப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியிடமிருந்து ரூபா 3,094,808 தொகையொன்று அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியிருந்ததுடன் இத் தொகைக்காக 5% இற்கு கிட்டிய அளவில் வட்டித் தொகையொன்று அதிகாரசபைக்குக் கிடைப்பதுடன் இத் தொகையினை தீர்வுசெய்து வேறு பயனுள்ள அல்லது பொருளாதாரப் பணியொன்றிற்காக பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.4 பயனற்ற செலவினங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க தகவல் திணைக்களத்தின் வேண்டுகோளிற்கமைய “நிதகச” கலாச்சார விழாவில் மானிக்கக் கல் ஒன்றின் மாதிரியில் தயாரிக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6.5 மில்லியனை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் இதற்காக

ரூபா 2,000,000 முற்பணத் தொகையொன்று அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படாதிருந்ததுடன் அதற்காக மாணிக்க மற்றும் தங்காபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை முத்துக்கள் உற்பத்தியாளர் சங்கத்துடன் இணைந்து முத்துக்களை வெட்டுவதல் மற்றும் பட்டைதீட்டுல் தொடர்பான பாடநெறியொன்றை நடாத்தும் பொருட்டு செய்திப்பத்திரிகை விளம்பரமொன்றைப் பிரசுரிப்பதற்காக ரூபா 1,166,704 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

3.2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான ஏற்மதி மேம்பாட்டு, சந்தைப்படுத்தல் திட்டத்தினை வெளிநாட்டு உயர்ஸ்தாணிகர்களிற்கு அறிமுகப்படுத்துவதற்கான ஒன்றுகூடல் வைபவத்திற்காக ரூபா 2,063,008 செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் இந் நிகழ்ச்சிக்காக பாதீட்டு மதிப்பீடொன்றைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) நாளாந்த வாகன ஓட்டப்பதிவேடுகள் மீதான தெரிவுப் பரிசோதனைகளில் 4 வாகனங்கள் தொடர்பில் வாகன ஓட்டத்தின் அடுத்துவரும் நாளில் காணப்பட வேண்டிய எரிபொருளின் அளவு ரூபா 36,385 பெறுமதியான 466.04 லீற்றர்களால் குறைத்துப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 3 வாகனங்கள் தொடர்பில் ரிபொருள் கொள்கலனின் இயலளவை மிஞ்சி 310.5 லீற்றர் எரிபொருள் நிரப்பவதற்காக ரூபா 23,960 செலவிடப்பட்டிருந்தது.

(இ) MF6/1/1/96 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 2.2.1(iv) ஆம் பந்தியின் படி தங்குமிட மற்றும் இணைந்த படிகளைப் பெற்றுக் கொள்கையில் அந்தந்த உத்தியோகத்தர்களிற்கு உரித்தான தெரிவு வீத அடிப்படை/திரட்டிய வீத அடிப்படையினைக் காட்டிலும் மிகையாக பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் பயணத்தின் பின்னர் தீர்வுசெய்யப்பட்டிருந்த தொகையினையும் கருத்திற்கொண்ட பின்னர் அவ்வாறு மிகையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த தொகையில் 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை அமெரிக்க டொலர் 1391.9 ஆகும்.

(ஈ) மேற்படி (தைை) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தங்குமிட மற்றும் இணைந்த படிகளிற்கு மேலதிகமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது 5 உத்தியோகத்தர்களிற்காக அவசரச் செலவினமாக 4000 டொலர்கள் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்ததுடன் இத் தொகையிலிருந்து நாளாந்தச் செலவினமாக செய்யப்பட வேண்டிய தொலைபேசிச் சிட்டைகள் மற்றும் டெக்சி கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையான அமெரிக்க டொலர் 1765.5 அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

3.2.6 பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாடு கொண்ட சொத்துக்கள்

பின்வரும் பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாடு கொண்ட சொத்துக்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூடிய வாடகை வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 2006 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொணராகலைக் கட்டடத்தின் 2010 திசெம்பர் 31 இல் பெறுமதி ரூபா 15,461,013 ஆகும். இக் கட்டிடத்திற்கான வருடாந்த பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 309,220 இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்படுவதுடன் இதனை பிராந்திய அலுவலகத்தினை நடாத்திச்செல்வதற்காக அன்றி வேறு பயனுள்ள நடவடிக்கைகளிற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி புதிய நகரத்தில் ரூபா 26,127,617 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கமைய சப்ரகமுவை மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் இக்கட்டிடத்திற்காக வருடாந்த பெறுமானத்தேய்வாக ரூபா 522,552 வருமானத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டு வருகிறது.

(இ) 2010 திசெம்பர் 31 இல் ரூபா 5,358,501 பெறுமதியான பெலிதெனிய கட்டிடம் எவ்வித பயனுள்ள பணிகளிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இக் கட்டடிடத்தினை பணம் அறவிடாது பயிற்சிப் பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்காக 2010 ஜனவரி 05 ஆந் திகதி தொடக்கம் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் 2010 செப்தம்பர் 01 ஆந் திகதி வரை எப் பாடநெறிகளும் நடாத்தப்படாதிருந்துடன் கட்டிட வளவு காடுகளினால் சூழப்பட்டிருந்தமை பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதரிக்கப்பட்டது. 2011 மே 13 ஆந் திகதிய தலைவரின் பதிலளிப்பின் படி

மானிக்கக் கற்களை வெட்டுவதற்கும் பட்டைதீட்டுவதற்கும் 30 பேர்கள் பயிற்சி பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாத்தரை பிராந்திய அலுவலகத்தில் சேவையாற்றி வரும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அலுவலகத்திற்குத் தேவையான இட வசதியின் அளவு என்பவை தொடர்பில் உறுதியான தீர்மானமொன்றிற்கு வராது ரூபா 28,000 மாத வாடகைக்கு இரண்டு மாடிக் கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் முதலாம் மாடி முழுமையாகவும் கீழ் மாடியின் அறையொன்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) உலக வாத்தக் மையத்தில் 09 வியாபாரக் கூடங்கள் வாடகைக்கு வழங்கப்படாது காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அதன் மூலம் அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்த இழப்பு ரூபா 7,441,649 ஆகும்.

(ஊ) நிலையான சொத்துக்களின் கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் (working Progress) தொடர்பாக 2001 தொடக்கம் 2005 வரையிலான காலப்பகுதியில் ரூபா 1,475,441 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஏதேனும் பயனுள்ள முன்னேற்றகரமான பணிகள் கடந்த 5 வருட காலத்தினுள் செய்யப்படாதிருந்ததுடன் குறித்த செயற்திட்டப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன.

3.2.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரசபையின் வளங்கள்

நிதி திட்டமிடல் அமைச்சினால் 1997 ஜனவரி 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 116 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி அரசாங்க முயற்சிகளிற்கு சொந்தமான வளங்கள் அமைச்சுக்களினால் பயன்படுத்தப்படக் கூடாதெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபைக்குச் சொந்தமான 03 வாகனங்களிற்காக ரூபா 539,117 உம் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திற்காக ரூபா 748,194 உம் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த 4 ஊழியர்களிற்கான சம்பளம், மேலதிநேர மற்றும் உபகாரப் படிகளிற்காக ரூபா 341,277 உம் செலுத்தப்பட்டிருந்தன.

2.2.8 இணங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த பெலிதெனிய கட்டிடத்திற்கான ரூபா 6,655 நீர்க் கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தாமையால் குறித்த நீர் மற்றும் மின்சாரத் தொடர்புகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக முறையே ரூபா 11,760 மற்றும் ரூபா 43,375 செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்கான ஏற்மதி மேம்பாட்டு, சந்தைப்படுத்தல் திட்டத்தினை வெளிநாட்டு உயர்ஸ்தாணிகர்களிற்கு அறிமுகப்படுத்துவதற்கான ஒன்றுகூடல் வைபவத்திற்காக ரூபா 72,100 இற்கு 300 அழைப்பிதல்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் 188 பேர்களிற்கு மாத்திரம் அழைப்பதல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. ரூபா 26,317 பெறுமதியான 112 அழைப்பிதல்கள் மிகையாக அச்சிடப்பட்டிருந்தன.

(இ) வர்த்தகக் கண்காட்சிக்கு Hoarding Diamond செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 54 ஸ்பொட் மின்குமிழ்களும் 18 ஹெலஜன் மின்குமிழ்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பௌதீகப் பரிசோதனைகளில் ரூபா 26,500 பெறுமதியான 02 ஹெலஜன் மின்குமிழ்களும் 01 பிரகட் டைம் பற்றாக்குறையாக காணப்பட்டன. கோள்வனவு செய்யப்பட்டிருந்த இவ் உபகரணங்கள் பொருட் பதிவேட்டிற்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2011 ஜுன் 02 ஆந் திகதி மேற்படி ரூபா 369,000 பெறுமதியான 27 ஸ்பொட் மின்குமிழ்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை குறித்த காலத்தில் செலுத்தாமை காரணமாக 50% ஆகிய ரூபா 10,350 தண்டப்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2010 ஒக்தோபர் 9 - 15 வரையான காலத்தில் இஸ்ரேலில் நடாத்துவதற்கு தீர்மானமாகியிருந்த Hall Marking Convention கூட்டத்திற்கு பங்குபற்றுவதற்காக விமாணச் சீட்டு மற்றும் வீசா பெற்றுக் கொள்வதற்காக ரூபா 107,570 செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த கூட்டத்தில் பங்குபற்றியிருக்கவில்லை.

3.2.9 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபைக்கான அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினை நிலையான பதவிகளிற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த

எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வெற்றிடங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

வகை	2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		
	அங்கீகரித்த எண்ணிக்கை	உள்ளபடியான எண்ணிக்கை	வெற்றிடமான எண்ணிக்கை
பதவிநிலை	54	30	24
பதவிநிலையற்ற	167	95	72
ஆரம்பகட்ட	51	41	10
ஒப்பந்த	-	45	-
சமயாசமய	-	35	-
தற்காலிக மற்றும் ஏனைய	-	04	-
	272	250	106

(ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(iv) மற்றும் (vii) ஆம் பந்திகளின் பிரகாரம் வெற்றிடமான பதவிகளிற்கு பதிற்கடமை/பணிகளை மேற்கொள்ளும் நியமனங்கள் 03 மாதங்களிற்கு மேற்படாதிருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கையிலும் வெற்றிடமான பதவிகளிற்காக அதிகாரசபையினால் நிலையான நியமனங்கள் வழங்கப்படாது 04 தொடக்கம் 12 மாதங்கள் வரையான காலத்திற்கு பதிற்கடமை/பணிகளை

மேற்கொள்ளும் நியமணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 12 பதவிகளிற்காக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 593,184 ஆனதுடன் முன்னைய ஆண்டில் 09 பதவிகளிற்காக ரூபா 727,105 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்காக ஒப்பந்த, தற்காலிக மற்றும் சமயாசமய என்ற அடிப்படையில் 84 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த 30 ஊழியர்களிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3.1(viii) ஆம் பந்தியின் படி முகாமைத்துவப் பதவியொன்றில் ஏற்படும் வெற்றிட நிரப்புகை பதில்வைப்பு திட்டமொன்றின் (Succession Plan) படி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்திடம் அவ்வாறான திட்டமொன்று இல்லாமையால் வெற்றிடமாகும் பதவிகளிற்கு நிலையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாது போயிருந்தது.

(உ) ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த உத்தியோகத்தர்களை 6.∴.2006 இன் சுற்றறிக்கைக்கு முரணாக அடிப்படைச் சம்பள அளவுத்திட்டத்தில் வைக்காது கூடிய சம்பள அளவுத் திட்டத்தில் வைத்திருந்தமையால் 15 உத்தியோகத்தர்களிற்கு (இணங்காணப்பட்ட) ரூபா 156,400 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அங்கீகரித்த பதவியணியில் இல்லாத பதவியொன்றான செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்காக 2010 மே 31 ஆந் திகதி தொடக்கம் பனிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர் முழுநேரச் சேவையில் ஈடுபடாதிருக்கையிலும் அவரிற்கு முழுநேர நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவரிற்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற ரூபா 20,000 படியும் மாதாந்த எரிபொருள் படியும் அடங்கலாக ரூபா 216,650 செலுத்தப்பட்டிருந்தது.

3.2.10 கூட்டுத் திட்டம்

2006 ï 2010 கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மானிக்க மற்றும் தங்காபரணத் தொழில் அபிவிருத்திக்கான குறித்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தமையால் அந்த இலக்குகளும் 2009 ï 2013 கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2009 ï 2013 கூட்டுத் திட்டத்தின் படி 2010 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை தெளிவாகக் காட்டக்கூடியவாறு வருடாந்தப் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.11 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்கிடையே 21% தொடக்கம் 74% வரையிலான குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வாடகை செலுத்துகைகள்

(ஆ) பிணைப்பணங்களை மீளளித்தல்

(இ) வாகனப் பயன்பாடு

(ஈ) ஆட்சேர்ப்பு

(உ) இருப்புக் கட்டுப்பாடு

(ஊ) பெறவேண்டிய கணக்குகள்

(எ) முற்பணங்களைச் செலுத்துதல்

(ஏ) நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரித்தல்

(ஒ) கொள்வனவு நடைமுறைகள்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி